# திருவள்ளுவரும் மனிதநேயமும்

சி. நயினார் முகம்மது

**முன்னுரை :** மனிதரை மனிதர் விரும்புவது மனிதநேயம், திருவள்ளுவர் வாய்மொழியில் அன்புடைமை எனக்கூறுவது பொருந்தும். பிறர் இன்புறக் கண்டு தாம் மகிழ்வதும், அவர் துன்புறக் கண்டு வருந்தி இரங்கி உதவித் துன்பம் நீக்கி மகிழ்விப்பதுடன் பிறர்க்குத் துன்பம் செய்யாமல் இருப்பதும் எனலாம்.

மனிதநேயம் திருக்குறளில் பெரிதும் போற்றப்படுகிறது. இதன் ஆசிரியர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றி வாழ்ந்தவள்ளுவர் என்னும் தமிழ்ச்சான்றோர். வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்துயர்ந்த மேதை. உலகமக்கள் வாழும் வழியறியாது மயங்கி வருந்தக்கண்டு வருந்தி, தாம்பெற்ற இன்பம் அவர்கள் அனைவரும் பெற்று மகிழ வேண்டும் என விழைந்து திருக்குறள் இயற்றி யருளினார் இதனால் திருவள்ளுவர் எனச் சிறப்பித்து அழைக்கப் பெறுகிறார்.

திருக்குறள் தூய தமிழில் இயன்ற மோதிலும் தமிழ் மொழி, தமிழ் நாடு தமிழ்அரசு, தமிழ் இனம் என்னும் சொல்லாட்சிகள் இதன்கண் இல்லை. உலகம், உலகு, ஞாலம், வையகம், மக்கள் என உலக மக்கள் அனைவரையும் குறிக்கும் சொற்களே பயின்றுள்ளன. முதல் குறட்பாவிலேயே உலகு இலங்குவதைக் காணலாம்.

“அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள்-1)

உலகில் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் ஈறாகக் கொண்ட உயிரனங்கள் பல கோடி வாழ்கின்றன. இவற்றில் ஆற்றிவு கொண்ட மானிடரே சிறந்தவர். எனவே தான் ஔவையார் “அரிது அரிது மானிடர் ஆதல் அரிது” என்றார். இவ்வாருயிர் மனிதர் உலகில் உண்டு, உடுத்து, உறையுள் இருந்து, பேசி விரும்புவன செய்து மகிழ்ந்து அச்சமின்றி மனிதஉரிமை வாழ்தல் வேண்டும். இது மனிதராகப் பிறந்திருப்பதினாலே பெற்ற மனிதஉரிமை என்பர்.

மனித உரிமை நூலசிரியர் பேரழிவு செய்த இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர் உலக அழிவினின்றும் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. உலக அமைதி காக்கும் பொருட்டு இம்மாமன்றம் 1948-இல் உலக மனித உரிமைப் பிரகடனம் செய்து வெளியிட்டு அனைத்து உறுப்பு நாடுகளும் செயல்படுத்த வேண்டும் எனவலியுறுத்தியது இப்பிரகடனத்தில் மேலே குறிப்பிடப்பட்ட மனித அடிப்படைத் தேவை உரிமை உள்ளிட்டனும் உரிமைகள் இடம் பெற்றுள்ளன.

கொடுமைகள் : இவ்வுரிமைப் பிரகடனம் வெளியிட்டு 57 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. போர் நின்றபாடில்லை. கொரியாப்போர், வியட்நாம் போர், காஷ்மீரப்போர், ஈராக் ஈரான் போர், பாஸ்னியகொசுவாப்போர், ரெவாண்டிப் போர், ஈராக் குவைத் போர், ஆப்கனிஸ்தான் போர், ஈராக்போர் என நீண்டு கொண்டே போகின்றன. ஆயிரமாயிரம் பேர் கொல்லப்பட்டனர். பலகோடிப் பொருட்கள் நாசமாயின. உற்றார் உறவினரை இழந்து, உடைமைகளையும் இழந்து அல்லல்பட்டோர் எண்ணற்றோர், போர் மட்டுமா?ஆசைப் பெருக்காலும் ஆதிக்க வெறியாலும் வலியோர் மெலியோரை வதைத்து வாட்டுகின்றனர். அன்பையும் அருளையும் போதிக்கும் சமயங்களின் பெயராலும் பகையும், பூசலும் போர்களும் நடத்துள்ளன. பயங்கரவாதிகள் படுகொலை செய்கினறனர். உலகநாடுகளில் பின்தங்கியவற்றில் வறுமையில் சிக்கி வருந்துகின்றனர் பலகோடிப்பேர் தீராத எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்களுக்குப் பல்லாயிரம்பேர் இரையாகின்றனர். இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, வறட்சி, புயல், பூகம்பம், கடல்கொந்தளிப்பு முதலியவற்றால் ஏற்படும் பேரழிவுகளுக்கு எல்லையே இல்லை. இக்கொடுமைகளுக்கு எல்லையே இல்லை. இக் கொடுமைகளெல்லாம் தீரவழியில்லையா என மனிதநேயம் கொண்ட சான்றோர் ஏங்கி வருந்துகின்றனர்.

**திரும்வழி :** இக்கொடுமைகளெல்லாம் தீர வழி கூறுகிறார் திருக்குறள்ஆசிரியர் திருக்குறளுக்கு அறம் என்னும் பெயரும் உண்டு. அறம் எனும் சொல் ஆழ்ந்தகன்ற பொருளுடையது. வளவாழ்விற்குக் கொள்ள வேண்டிய நல்லவற்றையும் தள்ள வேண்டிய தீயவற்றையும் வரையறுததுக் கொண்ட வாழ்வியல் நெறிஎனலாம். அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் அறம் சிறப்புத்தரும், செல்வம்தரும், ஆக்கமும்தரும்,

எனப்போற்ற பொருந்தும் வகையால் இயலும் இடங்களில் எல்லாம் இடைவிடாமல் அறச் செயல்களைச் செய்தல் வேண்டும் என வலியுறுத்துகிறார். தொடர்ந்து

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறம்
ஆகுல நீர பிற"

என அறத்திற்கு விளக்கம் கூறுகிறார்.

மனத்தில் மாசற்றவன் ஆதலே அறமாகும், எனக்கூறி மற்ற செயல்களெல்லாம் வெறும் ஆரவாரப் பகட்டே எனத்தள்ளி விடுகிறார். மனத்தூய்மை இன்மைதான் உலகில் தோன்றும் போர்களுக்கும் போராட்டங்ளுக்கும் துன்பங்களுக்கும் மூலகாரணம் என்பது திருவள்ளுவர் கருத்து. மனத்தூய்மையோடு செய்யும் அறச் செயல்களால் வருவதே இன்பம் அத்தூய்மையின்றிச் செய்பவற்றால் வருவது துன்பமே புகழும் இல்லை எனக் கூறுகிறார்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

மனத்தூய்மையோடு கூடிய அறச்செயல்களே உலக அமைதிகாக்கும். தூய்மை இல்லாமையே துன்பங்களுக்கும் கொடுமைகளுக்கும் காரணமாகும் எனத் தெளிவுபடுத்துகிறார். நடுவுநிலைமை கொடுமைகள் பலவும் தோன்றுதற்குக்காரணம் மக்கள் நடுவு நிலைமைபோற்றாமையே. தனக்கொன்று பிறர்க்கு ஒன்று என்ற இரட்டை நிலை தான் எங்கும் காணப்படுகிறது. அரசுகளிடையே அணிசேர்வது, அவரவர் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வது இக்காலத்தில் அரசியல் நீதியாக உள்ளது. பெறும் போர்கள் நடக்கின்றன பேரழிவுகள் உண்டாகின்றன; ஆதலின் திருவள்ளுவர், நலந்தருவதாக இருந்தாலும் அது நடுவுநிலைமை தவறியதாயின். நினைத்த அப்பொழுதே விட்டுவிடுக! தன் நெஞ்சம் நடுவு நிலைமை தவறித் தீய செயலில் ஈடுபடுமானால் கெட்டுவிடுவேன்" என்பதறிக எனக்கூறி அனைவரும் அறிந்த உவமை கொண்டு நடுவு நிலைமையை விளக்குகிறார். சமமாக இருந்து தன்னிடத்து வைக்கும் பொருளின் எடையைச் செம்மையாகக் காட்டும் நிறைகோல் போல் இருபக்கம் சாயாமல் நடுவு நிலைமை யோடிருந்தல் சான்றோர்க்கு அழகாகும்,

" சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தெ;
கோடாமை சான்றோர்க்கணி ருபால்"

சமன் செய்து சீர்தூக்கும் தராசுபோல் நடுவு நிலைமை போற்றினால் எல்லோரும் நல்ல வராகலாம். கேடுகளும் கொடுமைகளும் நடக்க மாட்டா என அறிவுரைபகர்கிறார்.

**கல்வி** : வளமான வாழ்விற்கு ஒளியூட்டி வழி காட்டுவது கல்வி, ஆதலின் எண்ணை முதலாகக் கொண்ட அறிவியலும் எழுத்தை முலமாகக் கொண்ட இலக்கியக் கலையியலும் கண்ணெனத்தகும் என்பர் அறிஞர்; கண்ணுடையவர் கற்றவரே; கற்றனைத்து ஊறும் அறிவு; கற்றார்க்கு யாதும் நாடாகும் ஊராகும் எனக் கல்வியின் சிறப்பையும் இன்றியமையாமையையும் கூறிய திருவள்ளுவர் அதிகாரத்தின் முகப்பிலேயே கல்விக்கு வரைவிலக்கணம் தருகிறார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"(குறள்-891)[8]

கற்க வேண்டும்; குற்றமறக் கற்க வேண்டும்; குற்றமறக் கற்க வேண்டும்; வாழ்விற்கு வளந்தருவனவற்றைக் கற்க வேண்டும் கற்றபின் அதன்படி நடக்க வேண்டும் என வல்லொலிமிகுந்த சொற்களாய் வலியுறுத்துகிறார். இன்று எதைஎதையெல்லாமோ கற்கின்றனர். எப்படி எப்படியோ நடக்கின்றனர் பயன்நோக்கிக் கற்றதற்கு எதிராகவும் செய்கின்றனர். அரசியலாகட்டும், வழக்கியல் ஆகட்டும் வணிகவியல் ஆகட்டும் சமூகவியல் ஆகட்டும் எங்கும் இந்நிலைதான் பரந்துள்ளது. இதன்விளைவே சமூகக் கேடுகள், போர்கள், கொடுமைகள் அனைத்தும், ஆதலின் இவைனைத்தும் தீர வேண்டுமானல் கற்றபடி நடக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் காட்டும் வழியாகும்; மனித நேயம் போற்றும் நெறியாகும்.

**வறுமை** : பல கோடி மக்களை வருத்தி வாட்டி இரை கொள்ளும் பெருமை பெற்றது வறுமை, இன்று உலகில் 6.2 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 800 மில்லியன் மக்கள் வறுமையால் வாடுகின்றனர்.

இக்கொடுமைக்குத் தீர்வுகாண மனிதநேய உணர்வை உருவாக்குகிறார் திருவள்ளுவர், 'நல்குரவு' அதிகாரத்தில் வறுமையைக் காட்டியிலும் துன்பம் தருவது

வேறில்லை; வறுமை என்னும் பாவி குடிப்பிறப்பினால் வரும் புகழை அழிக்கும்; இளிசொல் கூறும் தளர்ச்சியை உண்டாக்கும் நல்லதையே கூறினாலும் சிறப்பிழக்கும்; பெற்ற தாயும் முகந்திரிந்து நோக்குவார் எனக் கூறிவந்த திருவள்ளுவர் வறுமைப்பட்டவர் படும்பாட்டினை இருகாட்சிகளாக அமைக்கிறார். வறுமையால்வாடும் ஒருவன் 'நேற்றுவந்து துன்பந்தந்து கொன்றது போன்று வருந்திய வறுமை இன்றும் வருமோ' என்று கேட்கிறான், இன்னும் ஒருவறிஞன், நெருப்பினுள் உறங்குவதும் கூடும் ஆனால் வறுமையில் கண்மூடலும்இயலாது. என்று கூறுகிறான். இவ்விருவர் கூற்றுக்களையும் சொல்லோவியங்களாக்த் தீட்டி வறுமை துன்பத்தின் எல்லையையே காட்டி விடுகிறார்.

"இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு" (10)
நெருப்பினுள் துஞ்சலும் கூடும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடரிது" (11)

இவ்வறுமைக் கொடுமைகளையறிந்தால் உள்ளம் உறுதி, இரங்கி, உதவ முற்படுவாரல்லவா?

**இல்வாழ்வார்** : மணம் முடித்துநம்பியும் நங்கையும் இல்லத்தில் கூடி வாழும் குடும்ப வாழ்கை பழம் பெரும் தமிழ்ப் பண்பாடாகும். இல்வாழ்வான் என்பான தாய், தந்தை, மனைவி, ஆகிய இயல்புடைய மூவர், துறவியர், உண்ணவகையற்றோர், பாதுகாப்பின்றி வீட்டைவிட்டு வெளியேறியோர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தினர் ஆகியோரைப் பேணுவதுடன் தன்னையும் பேணி உதவுகின்றன. பழிக்கு அஞசித் சேர்த்த பொருளெல்லாம் பலரோடு பகுத்துண்ணுகிறான். ஆதலின் அறன்எனப்பட்டதே இல்வாழ்க்கை எனப் போற்றுகிறார். இத்தகு உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைத்து எண்ணப்படுவான் எனப் போற்றுகிறார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (12)

**அன்புடைமை** : இந்த இல்வாழக்கைக்கு ஆதாரமாக அமைவது அன்பேயாகும். இச்சிறந்த பண்பு வீட்டிற்கு வெளியேயும் பரவத் தொடங்குகிறது. அன்பர்கள் துன்புறக்கண்டு பொங்கி எழும் அன்பிற்கு அடைக்கும் தாழ்இல்லை; அன்புடையவர் ----------- 7 தாங்கியிருக்கும் தம் உடலையும் பிறர்க்கு ஈவர் எனப் பிறர்நலம் பேணும் பேரறத்தைக் கூறுகிறார். விருந்தோம்பலின் சிறப்பை விளக்கும் திருவள்ளுவர், இல்லத்தில் இருந்து குடும்பம் நலம் பேணி வாழ்வதெல்லாம் விருந்திரைப் பேணி உதவி செய்வதற்கே எனவலியுறுத்துகிறார்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செயதற் பொருட்டு"(13)

விருந்தோம்பல் மட்டுமல்ல இனிய சொல்லி நெறிப்படுத்துவதும் மனித நேயமாகும்;

"அல்லவை தேய அறம்பைநகம் நல்லவை
நாடி இனிய சொலின்" (14)

எனப் பொது நலம் பேணும் சிறப்பை --------------------8 வலியுறுத்திகிறார்.

'ஒப்புரவறிதல்' அதிகாரத்தில் பொதுநலம் பேணும். அறத்தைப் போற்றுகிறார். விடாதுமுயன்று சேர்த்த பொருளெல்லாம் தகுதியுடையவர்க்கு உதவுவதற்கே எனக் கூறுவதில் மனித நேய உச்சத்தைக் காணலாம்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (15)

பிற மனிதரும் தம்மை ஒத்துவரே தமக்குவந்த துன்பம் தம்மை வருத்தியது போன்றே அவர் துன்பம் அவரையும் வருத்தும் என்பதை அறிபவரே உயிர் வாழ்வார் எனச்சிறப்பித்து "மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் எனச்சாடுகிறார் பொதுநலம் பேணும் பேறறிவாளரின் செல்வம் ஊருணி நீர் நிறைந்தது போல், ஊரினுள் பழமரம் பழுத்தது போல், உறுப்பனைத்தும் மருந்தாகி அருகில் கிடைக்கும், மருந்துமரம் போல் எல்லோர்க்கும் பயன்படும் என மூன்று உவமைகள் கொண்டு நயந்தோன்ற விளக்குகிறார்.

பலா்க்கும் ஒருசேரப் பயனளிக்கும் மனித நேயம் போற்றிய திருவள்ளுவா் வறுமைப் பட்டு வருந்தும் தக்கார்க்கு உதவும் கொடை நலம் பற்றி ஈகை அதிகாரத்தில் விளக்குகிறாா் "வறியார்க் கொன்று ஈவதே ஈகை" என ஈகைக்கு வரைவிலக்கணம் கூறுகிறார். ஒருவா் வறுமைப்பட்டவரின் நலன்களையெல்லாம் அழிக்கும் பசியை நீக்குவது அவா் சேர்க்கும் பொருளைப் பாதுகாப்பாக வைக்கும் இடமாகும்; வறியவர்க்கு வழங்காமல் சேர்ந்து வைக்கும் பொருள் பிறா் எடுத்துச் செல்லக் கூடியது; ஈயாதகுக் கொடியவா் ஈத்துவக்கும் இன்பம் அறியாரோ? எனக் கேட்டு வருந்துகிறார்.

ஈத்துவக்கும் இன்பம் அறியாா் கொல் தாமுடைமை வைத்திழுக்கும் வன் கணவா் எனக் கடிந்துரைத்து மனித நேயத்தை வலியுத்துகிறாா்.

புகழை விரும்பாா் எவரும் இலா். இப்புகழைத் தேடியலைவாா் பலா், கிட்டாது வருந்துவா் மாசிலா மனத்தோடு செய்யும் ஈகை புகழ்பூத்த வாழ்வைத்தரும். அதுவே உயிர்க்கு வளர்ச்சிதரும் ஊதியமாகும். எனக் கூறுகிறார்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல ஊதியம் இல்லை உயிர்க்கு எனப் 'புகழ்' அதிகாரத்தில் வலியுறுத்துகிறார் தொடர்ந்து பல அதிகாரங்களில் பிறர்க்கு உதவும் மனித நேயத்தைப் போற்றுகிறார்.

**அரசு:** பொதுமக்கள் போற்றும் மனித நேயத்தை விளக்கி வந்த திருவள்ளுவா் அரசு ஆற்ற வேண்டிய பொதுநலப் பணிகளை வலியுத்துகிறார். வள்ளுவா்காலம் முடியரசுக்காலம். இக்காலத்தில் குடியரசு மலா்ந்து வருகிறது எனினும் அரசு, அரசுத் தலைவா், அரசினா் என்பன இரண்டிற்கும் பொதுவானவையே பொருட்பாலில் அரசு பற்றிய செய்திகளே அதிகம் . இறையாட்சி, செங்கோன்மை, கண்ணோட்டம் முதலிய அதிகாரங்களில் மனிதநேயம் சிறந்து காணலாம். திருவள்ளுவா் அரசுத் தலைவர்க்கு இருக்க வேண்டிய தகுதிகளாக அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல இன்மை, இன்சொல, ஈத்தளித்தல், செவிக்கேட்டல், சொற்கேட்டல், கொடை, அருள், நீதி, குடிமக்களைப் பேணிக்காத்தல் முதலிய பண்புகளையும் பணிகளையும் விளக்குகிறார். நாட்டின் வருவாய் பெருக்கத்தக்க வழிகளைக் கண்டறிந்து இயற்றலும், வளம் சேர்த்தலும், கேடு வராமல் காத்தலும் காத்த பொருளைப் பயனுள்ள நல்ல வழிகளில் பகுத்து அளித்தலும் வல்லது அரசு எனக் கூறுகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்ல தரசு"

அறவியல் வளர்ந்த இக்காலத்து அரசு ஆற்ற வேண்டிய பணிகளுக்குரிய பொருளாதாரத் திட்டம் போன்றுள்ளதல்லவா?

நாடு என்னும் அதிகாரத்தில் அரசு உருவாக்க வேண்டிய வளமார்ந்த நலந்திகழும் நாட்டினை விளக்குகிறார். குறைவில்லாத விளைச்சலும் தகுதிமிகுந்த பெருமக்களும் தாழ்வில்லாத செல்வரும் சேர்ந்து பெரும் பொருளால் விரும்பத்தக்கதாக அமைவதுடன், கடும்பசியும் கொடிய நோய்களும், பகையும் இல்லாமல் இருக்க வேண்டும், இன்பமும் பாதுகாப்பும், பொருந்தி மக்கள் விரும்புவன பெற்று மகிழ்ந்து அச்சமின்றி வாழும் இலட்சியத் திருநாடாக உருவாக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

**இன்னா செய்யாமை:** பிறா் நலம் பேணும் பேரறம் கூறும் திருவள்ளுவா் பிறர்க்குத் துன்பம் செய்வதை இடிந்துரைத்து அறிவுரை கூறுகிறார். துன்பம் வந்தபின் அதனை நீக்க முயலுவதைக் காட்டிலும் துன்பம் செய்யாதிருப்பது சிறந்த அறம் அல்லவா? வருமுன் காக்கும் மனித நேயம் ஆகும். தீவினையாக்கம் முதலான அதிகாரங்கள் பலவற்றில் பிறர்க்குத் துன்பம் செய்யாமயை வலியுறுத்துகிறார். அவ்வதிகாரங்களுள் 'இன்னாசெய்யாமை' குறிப்பிடத்தக்கது. இவ்வதிகாரக் குறட்பாக்கள் உலகப் பெரும் எழுத்தாளா் டால்ஸ்டாயைக் கவர்த்தவை. அவரது அகிம்சைக் (Non-violence) கொள்கை உருவாக்கத்திற்கு உதவியன என்பா்.[19] டால்ஸடாயிடம் ஈடுபாடுகொண்டவா் அகிம்சைப் போராட்டத்தை நடத்தி வெற்றிக் கண்ட காந்தியடிகள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

சிறப்பளிக்கும் செல்வம் பெறுவதாக இருந்தாலும் பிறர்க்குத் துன்பம் செய்தல் கூடாது. வெகுண்டெழுந்து ஒருவா் தமக்குத் துன்பம் செய்தாலும் அவர்க்கு எதிராகத் துன்பம் செய்தல் கூடாது. இவை சான்றோா் கொள்கை எனக் கூறவந்த திருவள்ளுவா்

மனிதரின் பழிக்கு பழி இரத்தத்திற்கு இர்த்தம் எனப் பழிவாங்கும் இயல்பைப் பயன்படுத்தி அறிவுரை கூறுகிறார் .

இன்னா செய்தாரைத் தண்டிக்க வேண்டுமா? ஆவர் நாணும் படி செய்து விடும் நன்னயம் செய்து மறந்து விடு எனக் கூறுவார் போல்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்

என நயம் படக் கூறுகிறார்.

தொடர்ந்து 'பிறதோர் உயிரின் துன்பத்தைத் தம் இன்பம் என உணர்ந்து உதவாவிட்டால் ஒருவர் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ எனக் கேட்கின்றார். ஏந்த அளவிலேனும் எப்போதும் மனத்தோடு பொருந்தாத துன்பம் செய்யாமை தலைசிறந்தது. துன் உயிர்க்குத் துன்பம் இது என்றறியும் ஒருவன் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்வது ஏன்? எனக் கேட்டு செய்யும் துன்பம் எல்லாம் செய்தவரையே தொடரும். ஆதலால் தமக்குத் துன்பம் வேண்டாதார் பிறர்க்குத் துன்பம் செய்யார் என அறிவுறுத்துகிறார்.

நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோயின்மை வேண்டுபவர்

எனச் சொன்னயந் தோன்ற விளக்குகிறார். பிறர்க்குத் துன்பம் செய்யாத பொது நலத்தை சமயம்: வலியுறுத்துகின்றார். உலகில் சமயங்கள் பலதோன்றியுள்ளன. இவற்றுள் பெரும் பான்மையினர் பின்பற்றும் சமயங்கள் கிறித்தவம், இஸ்லாம், இந்து சமயம், பௌத்தம் ஆகியன சமயங்கள் அனைத்தும் சாத்திரங்களிலும் சடங்குகளிலும் வேறுபட்டாலும் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபட்டாலும் அடிப்படைக் கொள்கைகளில், இலட்சியங்களில் வேறுபாட்டில் எனலாம். அன்பையும் அருளையும் மனித நேயத்தையும் வலியுறுத்துகின்றன. காட்டாக: கடவுள் அன்புமயமானவர் என்னும் கிறித்தவம், அருளாளன் அன்புடையோன் என்றும் இஸ்லாம். அன்பே சிவம் என்றும் இந்து சமயம். அருள் வழியையே அடிப்படையாகக் கொண்டது பௌத்தம். சுமயங்கள் அனைத்தும் பிறர்க்குத் துன்பம் செய்தல் கூடாது. அவர்படும் துன்பத்தை நீக்கி உதவவேண்டும் என்னும் மனித நேயத்தையே வலியுறுத்துகின்றன. எனினும் சமயங்களைப் பின்பற்றுவோர். சுாத்திரங்களையும், சடங்குகளையும் பெரிதாகக் கொண்டு பேதங்களையும் பெரிதாகக் கொண்டு பேதங்கற்பித்து, பிரிவினை உண்டாக்கி, பகையும் பூசலும் போரும் செய்யும் நிலைக்கு வந்துவிட்டனர்.

திருவள்ளுவர் உண்மையை விட்டு விட்டு ஊகங்களைப் பற்றிக் கொண்டு சர்க்சையிலும் சண்டையிலும் ஈடுபட்டுத்துன்புறுகின்ற மக்களுக்கு நல்ல வழிகாட்டுகின்றார்.

**உலகத்திற்கு முதலாகவும் மூலமாகவும் இருப்பது இறைவன**: வரலாற்றின் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவன் தனக்குவமை இலான், அவனை வணங்கு வோர் நீண்ட வாழ்வு பெறுபவர். அவர்களுக்குத் துன்பம் நேராது; மனக்கவலை தீரும் என இறைவனது இயல்புகளைக் கூறுகிறார். இக்கொள்கைக்கு மாறுபட்ட சமயம் உண்டா?.

புறந் தோற்றத்தையும் புறக்சின்னத்தையும் சடங்குகளையும் அவர் விரும்புவதாகத் தோன்றவில்லை நல்லோர் பழிக்கும் தீவினைகள் கூடாது என வலியுறுத்துகிறார்.

முலித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின

எனக் கூடா ஒழுக்க அதிகாரத்தில் கூறுவது காண்க.

பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் எனக் கூறி, சமயங்களால் ஏற்படும் பேதங்களையும் பிணக்குகளையும் வெறுத்தொதுக்குகிறார். எல்லோரும் ஒருதாய் மக்கள் போன்றவறே என்பது உணர்த்தப்படுகின்றதல்லவா?

சமத்துவம்: உலகில் சமயத்தால் மட்டுமா வேறுபாடுகளும் மாறுபாடுகளும் பூசல்களும் போர்களும் தோன்றியுள்ளன? இனத்தால், நிறத்தாலும் போராட்டங்களும் போர்களும் தோன்றிப் பேரழிவுகள் செய்துள்ளன. அறிவியல் வளந்துள்ள இக்காலத்தில் சமத்துவம் போற்றப்பட்டு வருகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய திருவள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிஉலகமக்கள் அனைவரும் சரிநிகர் சமானமே என்பதை வலியுறுத்தியுள்ளார். திருக்குறள் முழுவதும் சம நீதி ஒளி

வீசுவதைக் காணலாம் நோயில்லா நல்வாழ்வு. உயிர் உடலுடன் கூடி இருந்தால் தான் இயங்கமுடியும் செயற்கரிய செய்து சிறப்பெய்த முடியும். எனவே தான் திருமூலர்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்."

எனக் கூறுகிறார். நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் பழமொழியும் உடல் நலத்தை வலியுறுத்துகிறது. நோய் வந்தபின் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் வராமல் இருப்பது சிறந்தது. திருவள்ளுவர் 'அறிவுடைமை' அதிகாரத்தில் எதிரெதிரா காக்கும் அறிவினார்க் கில்லை அதிர வருவதோர் நோய்.

எனக் கூறுகிறார். 'மருந்து' அதிகாரத்தில் வரும்முன் காக்கும் மருத்துவம் பற்றி மிகச் சிறப்பாக விளக்குகிறார். உண்ட உணவு செரிமானம் ஆனபின் பசியின் அளவறிந்து உண்டால் உடலுக்கு மருந்து எதுவும் தேவைப்படாது, நெடுநாள் வாழலாம்: மாறுபாடாக உணவை நீக்கி உண்டால் உயிர்க்கு ஊறுபாடில்லை. மிக அதிகமாக உண்டால் நோய் நிலைத்து நிற்கும் எனக் கூறி உணவுப் பழக்கத்தினால் நோய் வருவதைத் தடுக்கலாம் எனக் கூறுகிற். நோய் நீங்க மருந்தையே உணவாகக் கொள்ளும் இக்காலத்தில் உணவையே மருந்தாக அமைக்கும் முறை இனிய நல வாழ்விற்கு உகந்ததாகும்.

நோய்வந்தபின் அதனை நீக்கவும் சீரிய சிகிச்சை மகத்துவமும் கூறுகிறார். நோய் இன்னதெனக் கண்டறிந்து. அது வருவதற்குரிய மூல காரணத்தைக் கண்டறிந்து, அந்நோய் நீங்குவதற்குரிய வழியைக் கண்டறிந்து, தோ்ந்த அவ்வழியில் தவறு ஏற்படாமல் செம்மையாகுதல் வேண்டும் எனக் கூறுகிறார். இத்துடன் அமையவில்லை தொடாந்து மருத்துவ நூல் கற்றறிந்த மருத்துவா் நோயுற்றவனின் வயது, நோயின்தாக்குநிலை, பரவுநிலை, நோயின் கால அளவு முதலியவற்றையெல்லாம் எண்ணிதகுந்த சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறுகிறார். இம்முறையைச் செம்மையாகப் பின்பற்றினால் நோயுற்ற ஆருயிர்களை சிறப்பிலிருந்து காப்பாற்றலாமல்லவா?

உணவுப் பழக்கத்தால் வரும் நோய் நீங்க வழியறிந்தோம். தீய ஒழுக்கத்தாலும் கொடிய நோய்கள் பற்றிப் பரவுகின்றன. காட்டாக உயிர்கொல்லி எய்ட்ஸ் (AIDS) நோய் மிகக் கொடியது. உலகில் 40 மில்லியன் மக்களைக் கவ்விப்பிடித்து இரைகொள்கிறது. இதற்கு மருந்து இதுவரை கண்டறிப்படவில்லை. இக்கொடிய நோய் தகாத பாலியல் உடல் உறவினால் ஏற்படுகிறது எனக் கூறப்படுகிறது. தீராத இவ்வுயிர்க்கொல்லி நோய் வராமல் தடுக்க வழி கூறுகிறார். அறத்துப் பாலில் 'பிறனில் விழையாமை' அதிகாரத்திலும் பொருட்பாலில் வரைவின் மகளிர் அதிகாரத்திலும் தகாத பாலியல் உடல் உறவால் உண்டாகும் கேடுகளை விளக்கி அதில் மக்கள் ஈடுபடாது இருந்ததற்கு அச்ச உணர்வை உருவாக்குகிறார். இன்பத்துப்பாலில் சீரிய காதல் ஒழுக்கத்தை அருவருப்பிற்குச்சிறிதும் இடமில்லாமல் இலக்கிய நயந்தோன்ற அழுகுபடச் சித்தரிக்கிறார். அவ்இலக்கிய மரபில் இடம் பெறும் பரத்தை வயிற்பிரிவுன்னும் பகுதியைத் திருவள்ளுவர் ஒதுக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. திருவள்ளுவர் கூறும் வழியில் நடந்தால் உயிர்க் கொல்லி எய்ட்ஸ் (AIDS) நோய் நெருங்குமா? நோய்களால் வருந்தும் மக்களின் துன்பம் நீங்க நெறி கூறுவதும் மனிதநேயம் அல்லவா?

போர்: திருவள்ளுவர் அக்காலப் போர் பற்றியும் கூறுகிறார். ஆனால் தற்காப்புப் போர் பற்றியே கூறுகிறார். இகல் என்னும் பகைத்து மாறுபடும் தீமை குறித்து இகல் அதிகாரத்தில் விளக்குகிறார். இறைமாட்சி அதிகாரத்தில் அரசு குடிகளைக் காக்கும் நெறிபற்றிச் சிறப்பாக விளக்குகிறார்.

செங்கோன்மை அதிகாரத்தில் வேலன்று வென்றி தருவது என்று படைக்கலம் ஏந்திப் போர் செய்வதைத் தடுக்கின்றார்.

'நாடு' அதிகாரத்தில் செறுபகையும் சேராது இயல்வது நாடு எனக் கூறுகிறார். எதிர்த்துத் தாக்கும் பகையைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். ஆதலின் திருவள்ளுவர் போர் செய்யாமையை வலியுறுத்துகிறார் என்பது பெறப்படுகிறது.

தொண்டு நிறுவனங்கள் : ஐக்கிய நாடுகள் மன்றம் போர்கள் தோன்றாவண்ணம் செய்யும் முயற்சியில் வெற்றி பெறவில்லை எனினும் போர் தொடங்கியபின் தொடராமல் தடுக்கும் முயற்சியில் பெரும் பாலும் வெற்றி பெற்றுள்ளது. போரின் போது

ஏற்பட்ட பேரழிவால் ஏற்பட்ட மக்களுக்கு உதவி வருகிறது. வறுமை ஒழிப்பு, கொடிய நோய் தடுப்பு முதலிய முயற்சிகளில் பெருந்தொண்டாற்றி வருகிறது பின் தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்கு உலகவங்கி உலகநிதியம் ஆகியன உதவி வருகின்றன. இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நிவாரணப் பணிகள் பாராட்டத் தக்கவை வளர்ந்த நாடுகளின் அரசுகளின் பெரும்நிதியளித்துள்ளன. தொண்டு நிறுவனங்களும் பெருமனங் கொண்ட பெருமக்களும் உதவி வருகின்றனர். செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கம் ஆகியவற்றின் பணிகுறிப்பிடத்தக்கது. இம்மனித நேயப் பணிகள் எல்லாம் உலக மனித மாமேதை காட்டும் வழியில் வந்தவை எனலாம்.

**முடிவுரை :** திருவள்ளுவர் வையகத்தில் வாழ்வோரெல்லாம் மனித நேயம் போற்றி வாழ்வாங்கு வாழ வேண்டும் என விழைந்து திருக்குறள் இயற்றுயருளியுள்ளார். அரசுகளின்மோதலாலும் ஏற்படும் போர்கள் வலியோர் பேரவையால் ஏற்படும் வன்செயல்கள் சமயங்களின் அறியாமையயால் தோன்றும் கேடுகள், வறுமையால் மக்கள்படும் அல்லல்கள், எயட்ஸ் போன்ற கொடிய நோய்களால் ஏற்படும் துன்பங்கள் இயற்கைச்சீற்றத்தால் ஏற்படும் பேரழிவுகள் என மனிதர்களின் இனிய வாழ்வைக் குலைக்கும் அனைத்தும் தீரத் திருவள்ளுவர் காட்டும் வழிகள் விளக்கப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்களும் வளர்ந்த நாடுகளும் மனிதநேயம் மிகுந்த பெருமக்களும் ஆற்றிவரும் மனிதநேயப் பணிகள் பாராட்டப் பட்டுள்ளன. இத்தகு இனிய பணிகள் தோன்றுதற்கு வழிகாட்டும் உலக மனிதநேய மாமேதை திருவள்ளுவர் நெறி உலகெங்கும் பரவுக என விழைந்து இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

**அடிக்குறிப்புகள்**


1. திருக்குறள் பா எண் 1
2. புலவர் ஆ. மாணிக்கம் உரை, தனிப்பாடல் திரட்டு முதல் பகுதி, பூம்புகார் பிரசுரம், சென்னை 1977. ப.32.
3. JACK DONNELY and RODA HOWARD, Ed INTERNATIONAL HAND BOOK OF HUMAN RIGHTS, GREEN WOOD PRESS, LONDON P.1
4. UN, RIRTIETH ANNIVERSARY OF THE UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS வெளியீடு PP 1 – 5.
5. திருக்குறள் பா, எண். 34.
6. திருக்குறள் பா, எண். 39
7. திருக்குறள் பா, எண். 48
8. திருக்குறள் பா, எண். 391
9. BORG BUNNER, TIME ALMANAC 2003 BSTON, 2003, P.709.
10. திருக்குறள் பா, எண். 1048
11. திருக்குறள் பா, எண். 1049
12. திருக்குறள் பா, எண். 50
13. திருக்குறள் பா, எண். 81
14. திருக்குறள் பா, எண். 96
15. திருக்குறள் பா, எண். 212
16. திருக்குறள் பா, எண். 228
17. திருக்குறள் பா, எண். 231
18. திருக்குறள் பா, எண். 385
19. இரா. இளங்குமரனார், திருக்குறள் வாழ்வியல் உரை, வர்த்தமாணன் பதிப்பகம், சென்னை, 1992, பக். 26.
20. திருக்குறள் பா, எண். 314
21. திருக்குறள் பா, எண். 320
22. அருள் செல்லத்துரை, விவிலியமும் தமிழ் இலக்கியமும், அருள்வாக்கு மன்றம் வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 2004, ப. 48.
23. ஆ.ச. அப்துல் ஹமீது பாகவி. தர்ஜீமானுல் குர் ஆன், பாக்கவி பப்ளிஷர்ஸ், சென்னை, 1975, ப. 3.
24. திருமூலர், திருமந்திரம் ஐந்தாம்பதிப்பு, காசிமடம், திருப்பனந்தாள், 1991, ப. 407.
25. திருக்குறள் பா, எண். 280

26. திருமூலர், திருமந்திம், ஐந்தாம் பதிப்பு காசிமடம் திருப்பனந்தாள், 1991, ப. 98.
27. திருக்குறள் பா, எண். 429
28. BORGNA BRUNNER Ed., TIME ALMANAC 2003, BOSTON, 2003, PP. 550 – 551.